# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2022 சனவரி

## (101) நிதிக் கணக்கீடு

---

## பகுதி A

**வினா இல. 01** - 40 புள்ளிகள்

(கட்டாய வினா)

இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களில் தரப்பட்ட தெரிவுகளிலிருந்து மிகச் சரியான விடையைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுகள் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களில், தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் விடையளிக்குமாறு கேட்கப்பட்டது.

இந்த உப வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகளில் இனங்காணப்பட்ட பொதுவான வழுக்கள் / பலவீனங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**வினா இல. 1.1**

இங்கு, வருமானக் கூற்றின் கூறுகள் பற்றிப் பரீட்சிக்கப்பட்டது. வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாததன் காரணமாக, சில பரீட்சார்த்திகள், விடை இல. (2) இல் சரியான விடை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்குப் பதிலாக விடை இல. (1) மற்றும் (4) இனைத் தெரிவு செய்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.2**

கடனடிப்படையிலான விற்பனை மீது விற்பனையாளர் ஒருவரால் பயன்படுத்தப்படும் மூல ஆவணம் பற்றி பெரும்பாலானவர்கள் தெரிந்து வைத்திருந்தனர். மூல ஆவணம் பற்றி சரியான புரிதலைக் கொண்டிருக்காத சில பரீட்சார்த்திகள் சரியான விடைக்குப் பதிலாக விடை இல. (3), (2) மற்றும் (4) இனைத் தெரிவு செய்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.3**

நடைறைச் சொத்திற்கான உதாரணமொன்றைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகளுக்கு எத்தகைய உருப்படிகளை நடைமுறைச் சொத்தின் கீழ் உள்ளடக்குவது என்பது பற்றிய புரிதல் இருக்காததால் சரியான விடைக்குப் பதிலாக விடை இல. (3) மற்றும் (2) இனைத் தெரிவு செய்திருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையை வழங்கியிருந்தனர்.

**வினா இல. 1.4**

தரப்பட்ட தகவல்களைக் கொண்டு, இலாபச் சமன்பாட்டைப் பயன்படுத்தி 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபத்தைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகளிடம் இலாபச் சமன்பாடு பற்றிய போதிய விளக்கம் காணப்படாததால் சரியான விடைக்குப் பதிலாக விடை இல. (4) மற்றும் (1) இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.5**

ரூபா 300,000/- பெறுமதியான அலுவலக உபகரணங்களையும் ரூபா 500,000/- இனைக் காசாகவும் இட்டு ஆரம்பிக்கப்படும் வியாபாரத்தில், மேற்படி ஊடுசெயலுக்கான கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான சரியான தாக்கத்தை தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஊடுசெயல்களின் தாக்கம் பற்றிய சரியான விளக்கத்தைக் கொண்டிருக்காததன் காரணமாக, சில பரீட்சார்த்திகள் விடை இல. (2) இல் சரியான விடை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்குப் பதிலாக விடை இல. (3) இனைத் தெரிவு செய்திருந்தனர். எவ்வாறாயினும், பெரும் எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்திருந்தனர். எனவே, பரீட்சார்த்திகள் அலுவலக உபகரணமும் காசும் வியாபாரத்தின் சொத்துக்கள் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

**வினா இல. 1.6**

பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும் ஊடுசெயல்கள் பற்றிக் கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் இது பற்றி சரியான விளக்கத்தைக் கொண்டிருக்காததால் சரியான விடைக்குப் பதிலாக விடை இல. (1), (3), (4) இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.7**

பரிப்புக்களில் அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய ஊடுசெயல் பற்றி வினவப்பட்டது. அனைத்து பரீட்சார்த்திகளும் இதற்கு சரியான விடை அளித்திருந்தனர். சரியான விடை, இல. (3) ஆகும்.

**வினா இல. 1.8**

உரிமையாளரது தொலைபேசிக் கட்டணக் கொடுப்பனவுடன் தொடர்புடைய எடுப்பனவு தொடர்பான கணக்கீட்டு எண்ணக்கரு பற்றிக் கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் கணக்கீட்டு எண்ணக்கருக்கள் பற்றிய போதிய அறிவு காணப்படாததால், சரியான விடைக்குப் பதிலாக விடை இல. (4), (3) மற்றும் (1) இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.9**

இங்கு, தரப்பட்ட தகவல்களிலிருந்து நேர்கோட்டு அடிப்படையின் கீழ், 2021 மார்ச் 31 இலான முன்கொணரற் பெறுமதியை (எழுதப்பட்ட பெறுமதியை) தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் நேர்கோட்டு முறையில் தரப்பட்ட சதவீதத்தில் தேய்மானத்தைக் கணிப்பிடுவதற்கான போதியளவு அறிவு காணப்படாததால், விடை இல. (2) இல் தரப்பட்ட சரியான விடைக்குப் பதிலாக, மற்றைய தவறான விடைகளைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.10**

இங்கு தரப்பட்ட 4 கூற்றுக்களில் சரியானதைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. தரப்பட்ட கூற்றுக்கள் தொடர்பில் சரியான விளக்கம் இன்மையால் பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடைக்குப் பதிலாக இல. (2), இல (3) மற்றும் இல. (4) இனைத் தெரிவு செய்திருந்தனர். பரீட்சை மீதி இணங்கியிருந்த போதிலும், கணக்கேடுகளில் வழுக்கள் காணப்பட முடியும். மேலும், பொதுப் பேரேடு என்பது ஒரு முதன்மைப் பதிவேடாகும். அத்துடன் வங்கிக் கணக்கிணக்கம் வணிக உரிமத்தினாலேயே தயாரிக்கப்படுகிறதே தவிர வங்கியால் அல்ல.

வினா இல. **1.11** தொடக்கம் **1.15** வரை தரப்பட்ட ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனப் பரீட்சார்த்திகள் குறிப்பிட வேண்டும். இனங்காணப்பட்ட பொதுவான தவறுகள் கீழ்வருமாறு:

**வினா இல. 1.11**

ஒழுக்கநெறிக் கோவையின் கோட்பாடுகள் பற்றிய சரியான புரிதலைக் கொண்டிருந்ததால் பரீட்சார்த்திகள் சரியான விடையான ‘‘**சரியானது’’** என்பதை எழுதியிருந்தனர்.

**வினா இல. 1.12**

கொள்வனவு நாளேட்டில் ஊடுசெயல் ஒன்றைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஆவணம் பற்றிய சரியான புரிதல் இன்மையால் சில பரீட்சார்த்திகள் சரியான விடையான ‘‘தவறானது’’ என்பதற்குப் பதிலாக ‘‘சரியானது’’ எனக் குறிப்பிட்டிருந்தனர். எவ்வாறாயினும், பெருமளவிலான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்திருந்தனர். கொள்வனவு நாளேட்டில் ஊடுசெயல்களைப் பதிவதற்கு பயன்படுத்தப்படுவது விலைப் பட்டியல் ஆகும்.

**வினா இல. 1.13**

தரப்பட்ட கூற்றினை போதியளவு விளங்கிக் கொள்ளாமையால் சில பரீட்சார்த்திகள் சரியான விடையான ‘‘சரியானது’’ என்பதற்குப் பதிலாக ‘‘தவறானது’’ என விடையளித்திருந்தனர். இருப்பினும், பெருமளவான பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்திருந்தனர். உரிமையாண்மை என்பது அதன் சகல பொறுப்புக்களையும் கழித்த பின்னர் சொத்துக்களில் எஞ்சியுள்ள பகுதியாகும்.

**வினா இல. 1.14**

செயற்கை நுண்ணறிவின் பிரயோகம் தொடர்பான சரியான கூற்று பற்றிய போதிய விளக்கம் இன்மையால், சில பரீட்சார்த்திகள் சரியான விடையான ‘‘தவறானது’’ என்பதற்குப் பதிலாக ‘‘சரியானது’’ எனக் குறிப்பிட்டிருந்தனர். எவ்வாறாயினும், பெருமளவிலான பரீட்சார்த்திகள் சரியான விடையினை அளித்திருந்தனர்.

**வினா இல. 1.15**

ஒவ்வொரு வியாபாரக் கொடுக்கல் வாங்கலிலும் இரட்டை அம்சம் காணப்படுகிறது என்பதை ஒவ்வொரு பரீட்சார்த்தியும் சரியாகப் புரிந்து வைத்திருந்ததால் சரியான விடையான ‘‘சரியானது’’ என்பதைக் குறிப்பிட்டிருந்தனர்.

இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கு தேவையானவிடத்து விடைகளை செய்து பார்த்த பின் விடைகளை விடைப்புத்தகத்தில் எழுதுமாறு கேட்கப்பட்டது.

**வினா இல. 1.16**

காசேட்டின் மீதிக்கும் வங்கிக் கூற்றின் மீதிக்குமிடையில் வித்தியாசம் காணப்படுவதற்கான இரண்டு சாத்தியமான காரணங்களை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் வினாவைச் சரியாகப் புரிந்துகொண்டு, சரியான விடைகளை வழங்கியிருந்தனர்.

**வினா இல. 1.17**

கணக்கீட்டுச் செயன்முறையின் இரண்டு கணக்கீட்டு வெளியீடுகளை நிரற்படுத்துமாறு கேட்கப்பட்டது. கணக்கீட்டு வெளியீடுகள் பற்றிய போதிய விளக்கமின்மையால் கீழ்வருவன போன்ற தவறான விடைகள் வழங்கப்பட்டிருந்தன.

- சொத்துக்களும் பரிப்புக்களும் - சொத்துக்கள், வருமானம்
- பரீட்சை மீதி - விற்பனைகள், கொள்வனவுகள்
- காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு - பொது நாட்குறிப்பேடு

**வினா இல. 1.18**

கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டின் இரண்டு பிரதிகூலங்களை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. பெருமளவிலான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை வழங்கியிருந்தனர்.

**வினா இல. 1.19**

''சொத்து'' எனும் பதத்தை வரைவிலக்கணப்படுத்துமாறு கேட்கப்பட்டது. பெருமளவிலான பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்திருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகள் சொத்துக்களை பரிப்புக்களுடன் சேர்த்து குழப்பி எழுதியிருந்தனர்.

**வினா இல. 1.20**

வியாபார சென்மதிகள் கணக்கை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. வரவு மற்றும் செலவுப் பதிவுகளை தவறாக பதிவு செய்ததன் காரணமாகவும் சில ஊடுசெயல்களைப் பதிவு செய்யாது விட்டதன் காரணமாகவும் பல வேறுபட்ட பெறுமானங்கள் பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்டிருந்தன. வினாவில் தரப்பட்ட தகவல்களுக்கு இணங்க, 2021 மார்ச் 31 இலான சரியான வியாபார சென்மதிகள் கணக்கு மீதி 1,000,000/- ஆகும்.

## <u>பகுதி B</u>

**வினா இல. 02** - 10 புள்ளிகள்
(கட்டாய வினா)

பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்த பின்னர், பரீட்சை மீதியைத் தயாரிப்பது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு இவ்வினாவில் பரீட்சிக்கப்பட்டது. பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.

கீழ்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன :

(1) சில பரீட்சார்த்திகள் பரீட்சை மீதியைத் தயாரிப்பதற்குப் பதிலாக பேரேட்டுக் கணக்குகளை மாத்திரம் தயாரித்திருந்தனர்.

(2) பரீட்சை மீதியின் வரவுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய தொகைகள் செலவுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(3) கடன் விற்பனைகள் மற்றும் கடன் கொள்வனவுகள் என்பன கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்குகள் ஊடாக சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

(4) அட்டுறு மின்சாரச் செலவினங்கள், சம்பந்தப்பட்ட செலவினக் கணக்குகளில் சரியானவாறு சீராக்கம் செய்யப்படவில்லை.

(5) காசு விற்பனைகள், கடன் விற்பனைகள், காசுக் கொள்வனவுகள் மற்றும் கடன் கொள்வனவுகள் என்பன வெவ்வேறான உருப்படிகளாகப் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(6) சரியாகக் கணிப்பிடப்பட்ட மோட்டார் வாகனங்களின் வருடாந்தத் தேய்மானமானது பரீட்சை மீதியில் பதிவு செய்யப்படவில்லை.

(7) சில்லறைக் காசு கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு இடுகையிடப்பட்ட செலவினங்கள் மற்றும் அந்தக் கணக்கின் மீதி என்பன பரீட்சை மீதிக்கு பிரதிபண்ணப்படவில்லை.

(8) தேய்மானம் சரியாகக் கணிப்பிடப்பட்டு, மோட்டார் வாகனக் கிரயத்திலிருந்து கழிக்கப்பட்டு (1,500 - 375) Rs.1,125/- (ஆயிரங்களில்) ஆகப் பதியப்பட்டிருந்தது.

**வினா இல. 03** - 10 புள்ளிகள்
(கட்டாய வினா)

இந்த வினா **பகுதி (A)** மற்றும் **பகுதி (B)** என 2 உப பகுதிகளைக் கொண்டிருந்தது.

**பகுதி (A)** இல், சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கையும் 2021 மார்ச் 31 இலான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றையும் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. **பகுதி (B)** இல், வினாவில் தரப்பட்டிருந்த கணக்கீட்டுச் சமன்பாட்டின் உருப்படிகள் (1) தொடக்கம் (5) வரையானவற்றிற்கு சாத்தியமான ஊடுசெயல்களை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.

**(A)** **(a)** பரீட்சார்த்திகளால் சமர்ப்பிக்கப்பட்ட விடைகளுக்கு இணங்க, சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கைத் தயாரிக்கும்போது விடப்பட்டிருந்த கீழ்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன :

(1) காசேட்டில் மாத்திரம் பதியப்பட வேண்டிய ஊடுசெயல்களை இனங்காணாது, சகல ஊடுசெயல்களும் காசேட்டில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தன.

(2) வரவுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய ஊடுசெயல்கள் செலவுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதேபோன்று மறுதலையாகவும் இடம்பெற்றிருந்தது.

(3) காசேட்டின் ஆரம்ப மீதி கணக்கின் வரவுக்கு பதிவு செய்யப்பட வேண்டும் என்ற போதிலும் சில பரீட்சார்த்திகள் கணக்கின் செலவுக்கு அதனைப் பதிவு செய்திருந்தனர்.

**(b)** வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் தயாரிப்பில் பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்ட விடைகளிலிருந்து கீழ்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன:

(1) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய உருப்படிகளை இனங்காணாது, சகல உருப்படிகளும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தன.

(2) சில பரீட்சார்த்திகள் சீராக்கப்பட்ட காசேட்டு மீதியிலிருந்து வங்கிக் கணக்கிணக்கத்தை ஆரம்பித்து, வங்கிக் கூற்றின் மீதியைப் பெற்றிருந்த அதே வேளை, வேறு சிலர் வங்கிக் கூற்றின் மீதியிலிருந்து வங்கிக் கணக்கிணக்கத்தை ஆரம்பித்து சீராக்கப்பட்ட காசேட்டு மீதியை அடைந்திருந்தனர். இங்கு, சில பரீட்சார்த்திகள் சேர்க்கப்பட வேண்டிய உருப்படிகளைக் கழித்தும் கழிக்க வேண்டிய உருப்படிகளைச் சேர்த்தும் எழுதியிருந்தனர்.

**வினா இல. 04** - 10 புள்ளிகள்
(கட்டாய வினா)

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உற்பத்திக் கிரயக் கூற்று பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரீட்சிப்பது இவ்வினாவின் நோக்கமாக இருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமான மட்டத்தில் விடைகளை அளித்திருந்தனர். எனினும் பரீட்சகர்களால் கீழ்வரும் பலவீனங்களும் அவதானிக்கப்பட்டிருந்தன :

(1) விடைகள் சரியான அமைப்பில் சமர்ப்பிக்கப்படவில்லை.

(2) புத்துருவாகும் வேலைகள் முதன்மைக் கிரயத்துடன் சீராக்கப்படாது இறுதிக் கிரயத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது.

(3) நேர் கூலிகள், நேர் செலவினத்தின் கீழ் சீராக்கப்பட வேண்டும் என்ற போதிலும், சில பரீட்சார்த்திகள் அவற்றை மேந்தலைச் செலவினங்களாக கருதியிருந்தனர்.

(4) தரப்பட்ட சதவீதங்களின்படி தொழிற்சாலை மற்றும் அலுவலகத்திற்கிடையில் பகிரப்படுவதற்கான மேந்தலையின் கணிப்பீடு சரியானவாறு மேற்கொள்ளப்படவில்லை.

(5) ‘‘மூலப் பொருள் நுகர்வு’’, ‘‘முதன்மைக் கிரயம்’’ மற்றும் ‘‘மொத்த உற்பத்திக் கிரயம்’’ போன்ற சொற்பதங்கள் கணிப்பிடப்பட்ட பெறுமதிகளுக்கு எதிரே எழுதப்படவில்லை.

(6) நேர் மற்றும் நேரில் செலவினங்கள் சரியாக இனங்காணப்படவில்லை.

(7) உற்பத்திக் கிரயம் மீதான 15% இலாப எல்லை கணிப்பிடப்படவில்லை.

**வினா இல. 05** - 10 புள்ளிகள்
(கட்டாய வினா)

இந்த வினா **(a), (b)** என இரு பகுதிகளைக் கொண்டது. **பகுதி (a)** இல் வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிக்குமாறும் **பகுதி (b)** இல் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சீராக்கப்பட்ட / திருத்தப்பட்ட நிகர இலாபத்தைக் கணிப்பிடுமாறும் கேட்கப்பட்டது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமான மட்டத்தில் விடைகளை அளித்திருந்தனர். ஆயினும் கீழ்வரும் பொதுவான பலவீனங்களும் அவதானிக்கப்பட்டன :

**(a)** (1) நாட்குறிப்பேட்டுப் பதிவுகளுக்குப் பதிலாக பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(2) நாட்குறிப்பேட்டுப் பதிவுகளுடன் சம்பந்தப்பட்ட வரவு மற்றும் செலவுப் பெறுமானங்கள் நாட்குறிப்பேட்டுப் பதிவுகளை எழுதும்போது இடம் மாற்றிப் பதிவு செய்திருந்தனர்.

(3) நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிக்கும்போது ஊடுசெயல்களுக்கு எதிரே ‘‘வரவு’’ அல்லது ‘‘செலவு’’ எனப் பதிவு செய்யவில்லை.

(4) தொங்கற் கணக்கின் ஊடாக சரிசெய்யப்பட வேண்டிய வழுக்களை இனங்காணவில்லை.

(5) உருப்படி (5) இன்படி வட்டி வருமானம் ரூபா 29,000/- இனை வட்டி செலவினக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டிருந்தமை பற்றி அதிகமான பரீட்சார்த்திகள் சரியாக விளங்கிக் கொண்டிருக்கவில்லை.

(6) உருப்படி (6) தொடர்பில் வழுவைச் சரியாக விளங்கிக் கொள்ளாது நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ரூபா 145,000/- இற்கும் ரூபா 154,000/- இற்குமிடையில் காணப்படும் வித்தியாசமான ரூபா 9,000/- இனைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக அவ்விரு பெறுமானங்களையும் நாட்குறிப்பேட்டில் உள்ளடக்கியிருந்தனர்.

**(b)** 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சீராக்கப்பட்ட / திருத்தப்பட்ட நிகர இலாபத்தை கணிப்பிடுவது தொடர்பில் கீழ்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன :

(1) சீராக்கப்பட்ட நிகர இலாபத்தைப் பெறும்போது, வரைவு இலாபத்திற்குச் சேர்க்கப்பட வேண்டிய உருப்படிகள் கழிக்கப்பட்டிருந்ததுடன் கழிக்கப்பட வேண்டிய உருப்படிகள் சேர்க்கப்பட்டிருந்தன.

(2) இலாபத்தை அதிகரிப்பதிலும் குறைப்பதிலும் தாக்கம் செலுத்துகின்ற ஊடுசெயல்கள் பற்றி பரீட்சார்த்திகள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

## <u>பகுதி C</u>

**வினா இல. 06** - 20 புள்ளிகள்

(கட்டாய வினா)

இந்த வினா **(a), (b)** என இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது. முற்றடக்க வருமானக் கூற்றை முன்வைப்பதிலுள்ள பரீட்சார்த்திகளின் அறிவு **பகுதி (a)** இல் பரீட்சிக்கப்பட்ட அதேவேளை நிதி நிலைக் கூற்றைச் சமர்ப்பிக்கும் அறிவு **பகுதி (b)** இல் பரீட்சிக்கப்பட்டது. ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

பொதுவாக அவதானிக்கப்பட்ட பிழைகளும் தவறுகளும் கீழ்வருமாறு :

**(a) முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பு :**

(1) இரண்டு ஆண்டுகளுக்கான சரியான தேய்மானத் தொகை கணிப்பிடப்பட்டு, வருமானக் கூற்றிற்கு எடுக்கப்படவில்லை.

(2) ஆண்டிற்கான மின்சார மற்றும் விளம்பரப்படுத்தல் செலவினங்களின் கணிப்பீட்டின்போது, இந்த இரண்டு செலவின உருப்படிகள் தொடர்பான அட்டுறு செலவினங்கள் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

(3) வருடாந்த காட்சியறை வாடகை ரூபா 600,000/- இற்குப் பதிலாக, பரீட்சை மீதியில் காட்டப்பட்டிருந்த செலுத்தப்பட்ட காட்சியறை வாடகையான ரூபா 550,000/- ஆனது வருமானக் கூற்றிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(4) ரூபா 300,000/- இற்கு 2021 சனவரி 01 இல் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் மீது ஆண்டிற்கு 20% இல் 3 மாத காலப்பகுதிக்கான தேய்மானத் தொகை ரூபா 15,000/- ஆனது சரியாகக் கணிப்பிடப்பட்டு வருமானக் கூற்றிற்கு எடுக்கப்படவில்லை.

(5) முற்றடக்க வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய உருப்படிகள் பற்றிய போதிய அறிவின்மையால், நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய உருப்படிகள் முற்றடக்க வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(6) ஆண்டின் காலப்பகுதியில் அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிப்புச் செய்யப்பட்ட ரூபா 800,000/- ஆனது பதிவு செய்யப்படவில்லை.

(7) சில பரீட்சார்த்திகள் மொத்த இலாபத்தைக் கணிப்பிடும்போது ஆண்டின் தொடக்கத்தில் இருந்த ஆரம்ப இருப்பினைக் கழித்து, இறுதி இருப்பினைச் சேர்த்திருந்தனர்.

(8) கட்டடம் மீதான தேய்மானமானது காணியின் கிரயத்தினைக் கழிக்காது காணி மற்றும் கட்டடத்தின் மொத்தக் கிரயத்தின் மீது கணிப்பிடப்பட்டிருந்தது.

(9) முற்றடக்க வருமானக் கூற்றில், பரீட்சை மீதியின் உருப்படிகள் ஆயிரங்களில் காட்டப்பட்டிருந்ததுடன் சீராக்கங்களுடன் தொடர்புடைய உருப்படிகளின் பெறுமானங்கள் சாதாரண பெறுமானங்களிலும் காட்டப்பட்டிருந்தன.

(10) முற்றடக்க வருமானக் கூற்றானது குறித்துரைக்கப்பட்ட வடிவ அமைப்பில் முன்வைக்கப் படவில்லை.

**(b) நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பு :**

(1) நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய உருப்படிகள் பற்றிய போதிய அடிப்படை விளக்கம் காணப்படாமையால், கொள்வனவுகள், விற்பனைகள், ஆரம்ப இருப்பு, வாடகை வருமானம் மற்றும் ஏனைய செலவினங்கள் என்பன நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(2) மின்சாரச் செலவு, விளம்பரப்படுத்தல் செலவு மற்றும் காட்சியறை வாடகை என்பன நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

(3) வியாபார வருமதிகளிலிருந்து ஆண்டின் காலப்பகுதியில் அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்புச் செய்யப்பட்ட ரூபா 800,000/- சரியாகக் கழிக்கப்படவில்லை.

(4) ரூபா 300,000/- இற்கு 2021 சனவரி 01 இல் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள், மோட்டார் வாகனங்களின் கீழ் காட்டப்பட வேண்டும் என்றபோதிலும், அது வேறான ஒரு உருப்படியாகக் காட்டப்பட்டிருந்தது. வேறு சில பரீட்சார்த்திகள் இந்தப் பெறுமானத்தைக் காட்டியிருக்கவில்லை.

(5) ஆண்டிற்கான தேய்மானமானது திரள் தேய்மானத்தில் காட்டப்படுவதற்குப் பதிலாக நிதி நிலைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(6) சில பரீட்சார்த்திகள் நிதி நிலைக் கூற்றில் உருப்படிகளை வகைப்படுத்தாது அனைத்து உருப்படிகளையும் ஒன்றாகவே காட்டியிருந்தனர்.

உதாரணம்: நடைமுறையல்லாச் சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள், உரிமையாண்மையும் பரிப்புக்களும், நடைமுறைப் பரிப்புக்கள் போன்றவை.

(7) வியாபார வருமதிகள் நடைமுறைப் பரிப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்த அதேவேளை வியாபார சென்மதிகள் நடைமுறைச் சொத்துகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

(8) அட்டுறுவான காட்சியறை வாடகை சரியாகக் கணிப்பிடப்படவில்லை என்பதுடன் நிதி நிலைக் கூற்றிலும் காட்டப்படவில்லை.

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** புதிய பாடத்திட்டத்தை முழுமையாகவும் ஆழமாகவும் படிக்கவும். புதிய பாட விடயங்கள் மீது கூடிய கவனம் செலுத்தவும்.

**(2)** வினாவைப் பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

**(3)** இப்பாடத்துடன் தொடர்புடைய புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், நாட்குறிப்பேடுகளைப் படிக்கவும்.

**(4)** அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக்கருக்களைச் சரியாக இனங்காண்பதுடன் வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தேவையான திறன்களையும் வளர்த்துக் கொள்ளவும்.

**(5)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்களும் சரியாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**(6)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதுடன் கணிப்பீடுகளையும் செய்முறைகளையும் சரியாக வெளிப்படுத்தவும்.

**(7)** அதிகளவான கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறுவதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

**(8)** உங்களது நேரத்தை வினைத்திறனாகப் பயன்படுத்தவும்.

**(9)** விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் போன்றவை சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சிக்கவும்.

**(10)** சிறந்த தயார்நிலையுடனும் பரீட்சையில் சித்தியடையும் முனைப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

\- * * * -